# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2358/70 - 2023 නොවැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2023.11.17

*2358/70 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 3/ 2021* (III)

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்***

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடனும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகளுடனுமான கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023*, நவெம்பர் *16*.

**ஒழுங்குவிதிகள்**

*2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய 2334/ 47 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

*(1) அவ்வொழுங்குவிதிகளின் பாகம்* II *இல் (திட்டமிடல்) 39 ஆம் ஒழுங்குவிதிக்கான உப தலைப்பில் "ஒருங்கிணைப்பு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஒருங்கிணைப்பும் உட்பிரிவிடுகையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;*


1A - PG 6553 — 366 (2023/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அவ்வொழுங்குவிதிகளின் 39 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்து, அவ்வொழுங்குவிதிகளின் 39அ என்னும் ஒழுங்குவிதியாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"39அ. காணித்துண்டொன்று அபிவிருத்தி நோக்கங்களுக்காக உட்பிரிவிடப்படலாம். காணித்துண்டுகளின் உட்பிரிவிடுகை அங்கீகாரத்துக்கமைந்ததாதல் வேண்டும்.";

(3) அவ்வொழுங்குவிதிகளின் 47 ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) அவ்வொழுங்குவிதியின் அட்டவணை 3.1 இல் (நிலப்பயன்பாட்டுப் பரம்பல்) -

(i) அவ்வட்டவணையின் "உயர்கல்வி" என்னும் நிலப்பயன்பாட்டைக் குறித்துக்காட்டுகின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரிசையை இடுவதன்மூலமும் :-

| | | | |
|---|---|---|---|
| "உயர்கல்வி | 24,263.7 | 0.90% | உயர்கல்வியுடன் தொடர்புபட்ட அபிவிருத்தி" |

(ii) அவ்வட்டவணையின் "கலாச்சார மற்றும் சுகாதார பராமரிப்பு" என்னும் நிலப்பயன்பாட்டைக் குறித்துக்காட்டுகின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரிசையை இடுவதன்மூலமும் :-

| | | | |
|---|---|---|---|
| "கலாச்சார மற்றும் சுகாதாரப் பராமரிப்பு | 76,175.1 | 2.83% | மாநாட்டு மையம், மருத்துவமனை, சுகாதார பராமரிப்புத் தொடர்பான அபிவிருத்தி" |

(iii) அவ்வட்டவணையின் "திறந்தவெளி (பூங்கா மற்றும் சதுக்கம்)" என்னும் நிலப்பயன்பாட்டைக் குறித்துக் காட்டுகின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரிசையை இடுவதன் மூலமும் :-

| | | | |
|---|---|---|---|
| "திறந்தவெளி (பூங்கா மற்றும் சதுக்கம்) | 242,461.9 | 9.00% | பொதுப்பயன்பாடு - சிறிய அளவிலான வணிகப் பணிகளுடனும் கார் தரிப்பிட வசதிகளுடனும் பூங்கா மற்றும் திறந்தவெளி" |

(iv) அவ்வட்டவணையின் "திறந்தவெளி (பூங்கா மற்றும் சதுக்கம்)" என்னும் நிலப்பயன்பாட்டைக் குறித்துக்காட்டுகின்ற வரிசையை உடனடுத்துப் பின்வரும் புதிய வரிசையை உட்புகுத்துவதன் மூலமும் :-

| | | | |
|---|---|---|---|
| "விளையாட்டுக்களுக்கான வசதி | 26,304.2 | 0.98% | பொதுப்பயன்பாடு - சிறிய அளவிலான வணிகப் பணிகளுடனும் கார் தரிப்பிட வசதிகளுடனும் விளையாட்டுக்களுக்கான வசதிகள்" |

(v) அவ்வட்டவணையின் "திறந்தவெளி (நீர்முகப்பு)" என்னும் நிலப்பயன்பாட்டைக் குறித்துக்காட்டுகின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன்மூலமும் :-

| | | | |
|---|---|---|---|
| "திறந்தவெளி (நீர் முகப்பு) | 97,071.5 | 3.60% | பொதுப்பயன்பாடு - சிறிய அளவிலான வணிகத்துடன் கால்வாய்கள் மற்றும் நீர்முகப்பு வழியான திறந்தவெளி" |

*(ஆ) அவ்வொழுங்குவிதியின் நிலப்பயன்பாட்டுத் திட்டத்தைக் குறித்துக்காட்டுகின்ற படம் 3.1 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் படத்தை இடுவதன் மூலமும் :-*




***படம் 3.1 நிலப்பயன்பாட்டுத் திட்டம்*** ";

*(4) அவ்வொழுங்குவிதிகளின் 48 ஆம் ஒழுங்குவிதியின் அட்டவணை 3.2 இல் (காணித்துண்டிற்கான திறனளவி அட்டவணை) -*

*(அ) அவ்வட்டவணை "1-RS-02" என்னும் காணித்துண்டுக் குறியீடு தொடர்பிலான வரிசையை உடனடுத்துக் கீழேயுள்ள "1-W-01" என்னும் காணித்துண்டுக் குறியீடு தொடர்பிலான வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் -*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| "1-W-00" | திறந்தவெளி (நீர்முகப்பு) | 2714.21 | - | - | - | - | - | " |

(ஆ) அவ்வட்டவணையின் "2-SF-04" என்னும் காணித்துண்டுக் குறியீடு தொடர்பிலான வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| "2-SF-01" | விளையாட்டுகளுக்கான வசதி | 26.304.20 | - | - | - | - | - | " |

(இ) அவ்வட்டவணையின் "3-01-05" என்னும் காணித்துண்டுக் குறியீடு தொடர்பிலான வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| "3-01-05" | உயர்கல்வி | 24,263.71 | 4.50 | 109,186.70 | 60% | 120 m | 25% | 15%" |

(ஈ) அவ்வட்டவணையின் "3-01-06" என்னும் காணித்துண்டுக் குறியீடு தொடர்பிலான வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| "3-01-06" | கலாச்சார மற்றும் சுகாதார பராமரிப்பு | 24,146.40 | 4.00 | 96,585.60 | 50% | 150 m | 40% | 10%" |

(5) அவ்வொழுங்குவிதிகளின் 55 ஆம் ஒழுங்குவிதியின் (வணிக நிலப்பயன்பாடு) அட்டவணையில், அவ்வட்டவணையின் "1.1 அனுமதிக்கப்படும் பயன்பாடுகள்" என்னும் விடயத்தைக் குறிக்கின்ற வரிசையில் "அலுவலகம்" என்னும் உப தலைப்பின் கீழ் "காணித்துண்டுகள் 1-01-04, 1-01-08, 1-01-11, 1-01-12, 3-01-02, 3-01-06, 3-01-07, 3-02-09, 3-02-10 : மொத்த தளப்பரப்பின் ஆகக்குறைந்தது 70%" என்னும் சொற்களையும் எண்களையும் நீக்கிவிடுவதன் மூலமும் ;

(6) அவ்வொழுங்குவிதிகளின் 58 ஆம் ஒழுங்குவிதியில் (கல்வி/ உயர்கல்வி நிலப்பயன்பாடு)-

(அ) அவ்வட்டவணையின் '3.2 அதிகபட்ச நெடுமேடைப்பீட உயரம்' என்பதைக் குறிக்கின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "3.2 அதிக பட்ச நெடுமேடைப்பீட உயரம் | காணித்துண்டு 3-01-05 : நெடுமேடைப்பீடக் கட்டிடத்தின் அதிகபட்ச அனுமதிக்கத்தக்க உயரம், பிரதான காணித்துண்டு அணுகுகைப் புள்ளியிலிருந்து 25.0m ஆகும். காணித்துண்டு 3-01-04 : இல்லை" |

(ஆ) அவ்வட்டவணையின் '4.2 அடித்தள பின்னடைவு' என்பதைக் குறிக்கின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "4.2 அடித்தள பின்னடைவு | • பொதுக் காணித்துண்டின் எல்லைகள் : 0m<br>• வீதிகளை முனைப்பாகக் கொண்ட எல்லாக் காணித்துண்டு களினதும் எல்லைகள் : 3.0m" |

(இ) அவ்வட்டவணையின் '4.3 கோபுரங்களுக்கு பின்னடைவு' என்பதைக் குறிக்கின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "4.3 கோபுரங்களுக்கு பின்னடைவு | • காணித்துண்டு 3-01-04 : இல்லை.<br>• காணித்துண்டு 3-01-05 : நெடுமேடைப் பீடத்தின் விளிம்பிலிருந்து ஆகக்குறைந்தது 6.0m" |

(7) அவ்வொழுங்குவிதிகளின் 61 ஆம் ஒழுங்குவிதியின் அட்டவணையில் (கலாச்சார மற்றும் சுகாதார பராமரிப்பு நிலப்பயன்பாடு)-

(அ) அவ்வட்டவணையின் '1.1 அனுமதிக்கப்படும் பயன்பாடுகள்' என்னும் விடயத்தைக் குறிக்கின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "1.1 அனுமதிக்கப்படும் பயன்பாடுகள் | • மருத்துவமனை :<br>காணித்துண்டு 3-01-06 : மொத்த தளப்பரப்பின் ஆகக் குறைந்தது 60%.<br><br>• மாநாட்டு/கண்காட்சி மையம் :<br>காணித்துண்டு 3-01-09 : மொத்த தளப்பரப்பின் ஆகக் குறைந்தது 60%."<br><br>• பிற ஈடுசெய்யும் பயன்பாடுகளுக்கு பயன்கள் :<br>வார்ப்படத்தைப் பார்க்கவும்." |

(ஆ) அவ்வட்டவணையின் '2.4 மென்மையான நிலப்பரப்பு நிலவடிவமைப்பு/ மரங்கள் நடப்பட்ட பகுதிகளின் விகிதம்' என்னும் விடயத்தைக் குறிக்கின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "2.4 மென்மையான நிலப்பரப்பு/ நில வடிவமைப்பு/ மரங்கள் நடப்பட்ட பகுதிகளின் விகிதம் | காணித்துண்டு 3-01-06 :<br><br>• நிலத்தளப்பரப்பு மட்டத்தில் மென்மையான/மரங்கள் நடப்பட்ட பகுதிகளானவை, அமைவிடத்துக்குக் குறுக்கே மொத்த நிலப்பரப்பு நிலவடிவமைப்புப் பகுதிகளின் ஆகக்குறைந்தது 30 சதவீதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>• ஏனைய தளப்பரப்புக்களில் மென்மையான நிலப்பரப்பானது நிலவடிவமைப்பானது, நிலப்பரப்பு நிலவடிவமைக்கப்பட்ட பகுதிகளின் ஆகக்குறைந்தது 20 சதவீதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>காணித்துண்டு 3-01-09 :<br><br>• நிலத்தளப்பரப்பு மட்டத்தில் மென்மையான/மரங்கள் நடப்பட்ட பகுதிகளானவை, அமைவிடத்துக்குக் குறுக்கே மொத்த நிலப்பரப்பு நிலவடிவமைப்புப் பகுதிகளின் ஆகக்குறைந்தது 30 சதவீதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>• ஏனைய தளப்பரப்புக்களில் மென்மையான நிலப்பரப்பு நிலவடிவமைப்பானது, நிலப்பரப்பு நிலவடிவமைக்கப்பட்ட பகுதிகளின் ஆகக்குறைந்தது 30 சதவீதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். |

(இ) அவ்வட்டவணையின் '3.2 அதிகபட்ச நெடுமேடைப்பீட உயரம்' என்பதைக் குறிக்கின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "3.2 அதிகபட்ச நெடுமேடைப்பீட உயரம் | காணித்துண்டு 3-01-06 :<br><br>பிரதான காணித்துண்டு அணுகுகைப் புள்ளியிலிருந்து 25.0m<br><br>• காணித்துண்டு 3-01-09 :<br><br>இல்லை" |

(8) அவ்வொழுங்குவிதிகளின் 80 ஆம் ஒழுங்குவிதியின் அட்டவணையில் (காணித்துண்டு அபிவிருத்திக் கட்டுப்பாடுகள் - இயற்கை நிலத்தோற்ற அமைப்பு), அவ்வட்டவணையின் '2.3 கூரை நிலவடிவமைப்பு' என்பதைக் குறிக்கின்ற வரிசையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரிசையை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "2.3 கூரை நிலவடிவமைப்பு | • பல்மாடிசார் தரிப்பிடத்திற்கான கூரை பூங்கா, வதிவோரின் உரிய முறையில் குறித்த அபிவிருத்தியின் திறந்த இடைவெளித் தேவைப்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு தேவைப்பாடுகளுக்கமைய நிலவடிவமைப்பு செய்யப்பட வேண்டும்.<br><br>• காணித்துண்டுகள் 3-01-04 : மற்றும் 3-01-05 :<br><br>கல்விசார் விழுமியத்துடன் நேரடியாகத் தொடர்புபட்ட பொருட்களை வழங்குவதற்காக கூரைத் தோட்டம் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.". |

EOG 11-0191